# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 321 | 4 Pages | 23.6.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 321 | 4 பக்கங்கள் | 23.6.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## இந்துஜா குடும்பத்தினருக்கு சிறை தண்டனை சுவிட்சர்லாந்து கோர்ட்டு அதிரடி





ஜெனிவா, ஜூன் 23

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான இந்துஜா குழுமத்தின் தலைவர் பிரகாஷ் இந்துஜா, அவரது மனைவி கமால் இந்துஜா, மகன் அஜய் மற்றும் மருமகள் நம்ரதா ஆகியோர் சுவிட்சர்லாந்தில் வசிக்கின்றனர்.

இவர்கள் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக வேலையாட்களை அழைத்து வந்து தங்கள் வீட்டில் பணியமர்த்தி வருவதாகவும், அவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கி அதிக நேரம் வேலை செய்யும்படி மிரட்டுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. வேலைக்கு அழைத்து வருபவர்களின் பாஸ்போர்ட்டுகளையும் வாங்கி வைத்துக்கொண்டு மிரட்டி வேலை வாங்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக சுவிட்சர்லாந்து கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில், மனித கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டில் இந்து இந்துஜா குழும தலைவரான பிரகாஷ் இந்துஜா விடுவிக்கப்பட்டார். ஆனால், பிற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் தண்டனை வழங்கப்பட்டது. பிரகாஷ் இந்துஜா (வயது 78), அவரது மனைவி கமால் இந்துஜா (வயது 75) ஆகியோருக்கு தலா நான்கரை ஆண்டுகளும், மகன், மருமகள் ஆகியோருக்கு தலா நான்கு ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

## பயிர் கழிவுகளை எரிக்க வைத்த தீ குடியிருப்புகளுக்கும் பரவியது 11 பேர் பலி



அங்காரா, ஜூன் 23

துருக்கி நாட்டின் மார்டின் மற்றும் டியர்பகீர் மாகாணங்களுக்கு இடையே ஏக்கர் கணக்கில் விவசாய நிலம் உள்ளது. இந்த விவசாய நிலத்திற்கு அருகே பல்வேறு கிராமங்கள் உள்ளன.

இதனிடையே, விவசாய நிலத்தில் அறுவடைக்குப் பின் பயிர் கழிவுகளுக்கு விவசாயிகள் நேற்று இரவு தீ வைத்துள்ளனர். ஆனால், காற்றின் வேகம் அதிகரித்ததால் தீ மளமளவென அருகில் இருந்த கிராமங்களில் உள்ள குடியிருப்புகளுக்கும் பரவியது.

இரவு நேரம் என்பதால் அனைவரும் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தனர். இதனால், குடியிருப்புகளுக்கு தீ பரவியது குறித்து தெரியவில்லை. தீ மளமளவென குடியிருப்புகளுக்கும் பரவியதில் பலர் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும், 80க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தீ விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் மற்றும் போலீசார் விரைந்து வந்து படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், பற்றி எரிந்த தீயை பல மணிநேரம் போராடி கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

## சீனாவில் தொடர் மழையால் வெள்ளப்பெருக்கு: 47 பேர் பலி



பீஜிங், ஜூன் 23

சீனாவின் தெற்கு பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்கிறது. பல்வேறு இடங்களில் திடீர் வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் ஏற்படுகின்றன. ஆறுகளில் அபாய அளவைத்தாண்டி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குவாங்டாங் மாகாணத்தில் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளில் சிக்கி இதுவரை 47 பேர் பலியானதாக அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. பல்லாயிரக்கணக்கானமக்கள்வெளியேற்றப்பட்டு பாதுகாப்பானஇடங்களுக்குஅனுப்பப்பட்டுள்ளனர். வரும்நாட்களில் வெள்ளப்பெருக்கு இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சீனாவின் தெற்கு பகுதியில் இவ்வாறு மழைவெள்ளத்தால் மக்கள் அவதிப்படும் நிலையில், வடக்கு பகுதியில் கடுமையான வறட்சி மற்றும் அதிகபட்ச வெப்ப அலை வீசுகிறது. இத்தகைய தீவிர வானிலையுடன் அரசு போராடி வருகிறது. மக்களைபாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு அதிபர் ஜி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

# நான் ஓடி ஒளிபவன் அல்ல.. சபையில் இருந்து வெளியேறியவர்களுக்கு முதல்வர் விளக்கம்





சென்னை. ஜூன் 12

"முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று சொன்னவர்களுக்கு... எங்கும் ஓடி ஒளியாமல் பேசியுள்ளேன். அவையில் இருந்து கேட்க மனமில்லாமல் அரசியல் ஆதாயங்களுக்காக வெளியேறியவர்கள் இந்தக் காணொளியைக் காணட்டும்..." எனக் கூறி தான் சட்டசபையில் பேசிய வீடியோவை வெளியிட்டுள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

தமிழக சட்டப்பேரவை இரண்டாவது நாளாக இன்று கூடியது. அப்போது அதிமுக, பாமக எம்எல்ஏக்கள் கருப்பு நிற உடையணிந்து வந்திருந்தனர். கள்ளச்சாராயம் குடித்து கள்ளக்குறிச்சியில் 50 பேர் பலியான சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவர்கள் கருப்பு சட்டை அணிந்து வந்தனர். சட்டசபை தொடங்கியதும் கள்ளக்குறிச்சி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று அதிமுக எம்எல்ஏக்கள் கோரினர்.

அதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததால் அதிமுக உறுப்பினர்கள், முதல்வர் ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என்று கூறி பதாகைகளை ஏந்தி சபாநாயகர் இருக்கை முன்பு கோஷமிட்டனர். இதையடுத்து சட்டசபை எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர் பி உதயகுமார் உள்பட அமளியில் ஈடுபட்ட அதிமுக எம்எல்ஏக்கள் வெளியேற்றப்பட்டனர். பாஜக, பாமக எம்எல்ஏக்களும் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதைத்தொடர்ந்து சட்டசபையில் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணம் தொடர்பாக சட்டசபையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது பேசிய முதல்வர் ஸ்டாலின், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டார். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான அவசர மருத்துவ உதவிகளை செய்ய வலியுறுத்தி உள்ளதாகவும், கூடுதலாக 57 அரசு மருத்துவர்களை கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

மேலும் சிகிச்சைக்கு தேவைப்படும் உயிர்காக்கும் மருந்துகளும் கையிருப்பில் உள்ளன என்று அவர் கூறினார். பாதிக்கப்பட்ட 164 நோயாளிகளில் 117 பேர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஸ்டாலின் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக கோவிந்தராஜ் என்ற கண்ணுக்குட்டி என்பவரை கைது செய்து, 200 லிட்டர் மெத்தனால் சாராயம் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்தார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரிக்கவும், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவும் சிபிசிஐடி விசாரிக்க உத்தரவிட்டுள்ளேன் என்றும் உள்துறை செயலாளர், டிஜிபி ஆகியோர் 2 நாளில் விசாரணை அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன் என்றும் முதல்வர் தெரிவித்தார். அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். மெத்தனால் தயாரிப்பு மற்றும் பயன்படுத்தும் ஆலைகளை தணிக்கை செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் கள்ளச்சாராயத்தால் பெற்றோரை இழந்தோருக்கு உயர்கல்வி வரை படிப்பு செலவை அரசே ஏற்கும் என்றும் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை பராமரிப்புத் தொகையாக மாதம் ரூ.5000 வழங்கப்படும், 5 லட்சம் வைப்பு நிதி வழங்கப்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு 3 லட்சம் வைப்பு நிதியாக வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

உள்துறையை கவனிப்பவன் என்ற முறையில் மட்டுமல்ல, தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் இந்த பிரச்ழ்னையில் இருந்து ஓடி ஒளிபவன் அல்ல, பொறுப்புடன் பதிலளிப்பவன் என்று முதல்வர் கூறினார். அதனால் தான் எடுத்த நடவடிக்கையை பட்டியலிட்டு, குற்றவாளிகளை கைது செய்த பிறகே பதிலளிக்கிறேன் என்று அவர் தெரிவித்தார். சமூக விரோதிகளிடம் இருந்து மக்களை காக்க எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுப்பேன் என்று முதல்வர் ஸ்டாலின் உறுதி அளித்தார்.

தான் இன்று சட்டசபையில் பேசிய காணொளியை எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள முதல்வர் ஸ்டாலின், சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிவுற்றதும் கள்ளக்குறிச்சி விவகாரம் பற்றிப் பேசப்படும் என்பதை அறிந்தே, வெளிநடப்பு எனும் மலிவான அரசியலை எதிர்க்கட்சியினர் செய்துள்ளனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றசாட்டு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும் என்று சொன்னவர்களுக்கு எங்கும் ஓடி ஒளியாமல் இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பட்டியலிட்டுள்ளேன். அவையில் இருந்து கேட்க மனமில்லாமல் அரசியல் ஆதாயங்களுக்காக வெளியேறியவர்கள் இந்தக் காணொளியைக் காணட்டும் என்று முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# கள்ளச்சாராய விவகாரம்; பொறுப்பை தட்டிக் கழித்த காரணத்திற்காக தி.மு.க. அரசு நிவாரணம் கொடுத்தே ஆக வேண்டும்: எல்.முருகன்



சென்னை, ஜூன் 23

மரக்காணம் சம்பவத்திற்குப் பின்னரும் தி.மு.க. அரசு பாடம் கற்கவில்லை என, மத்திய இணை மந்திரி எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"தி.மு.க. அரசு கள்ளச்சாராய விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு மரக்காணத்தில் நடந்த சம்பவத்தில் இருந்து கூட தி.மு.க. அரசு பாடம் கற்கவில்லை. கிராமம் கிராமமாக டாஸ்மாக் கடை திறந்து வைத்திருக்கிறார்கள். பள்ளிக்கூட வாசலில் கஞ்சா விற்பனை நடக்கிறது.

இதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் அதை தி.மு.க. அரசாங்கம் ஒழிக்கத் தவறிவிட்டது. அதனால் இன்று அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர். பொறுப்பை தட்டிக்கழித்த காரணத்திற்காக தி.மு.க அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுத்தே ஆக வேண்டும்."

இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்.

# பெண், திருநங்கை டிரைவர்களுக்கு புதிய ஆட்டோ வாங்க ரூ,1 லட்சம் மானியம்: அமைச்சர் சி.வி.கணேசன் அறிவிப்பு

சென்னை, ஜூண் 23

தமிழக சட்டசபையில் நேற்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கைகள் மீது எம் எல் ஏக்கள் விவாதித்தனர். அவர்களுக்கு பதில் அளித்து அந்த துறையின் அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:

தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் இந்த அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முன்பு விபத்து நேரிட்டால் உதவித்தொகை கிடைப்பதற்கு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஆனால் இப்போது விபத்து நேரிட்ட 48 மணி நேரத்திற்குள் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

கரூரில் கட்டுமானத் தொழிலாளர்கள் 2 பேர் விபத்தில் இறக்க நேரிட்டபோது அதற்கான நிவாரண உதவித்தொகை ரூ,10 லட்சம், 2 நாட்களுக்குள் உரியவர்களிடம் வழங்கப்பட்டுவிட்டது. இந்த ஆட்சியில் இதுவரை 21 லட்சம் தொழிலாளர்களுக்கு ரூ,1,646 கோடி அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணிநியமன ஆணைகளை தமிழக அரசு பெற்றுத்தந்துள்ளது" என்று அவர் பேசினார்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் சி.வி.கணேசன் வெளியிட்ட புதிய அறிவிப்புகள் வருமாறு:

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுனர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 1000 பெண் அல்லது திருநங்கை டிரைவர்கள், புதிதாக ஆட்டோ வாங்கும் செலவில் தலா ரூ,1 லட்சம் மானியமாக வழங்கப்படும்.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு உற்பத்தியின்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள்,

ரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து விருதுநகர் உள்ளிட்ட பட்டாசு தொழில் அதிகம் உள்ள 8 மாவட்டங்களில் 7,500 தொழிலாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். தொழில்களில் வல்லுனர்களாக விளங்குபவர்களைக் கண்டறிந்து அவர்களின் கருத்துகளை வீடியோக்களில் பதிவு செய்து அதை கல்வி தொலைக்காட்சி மூலம் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் ஒளிபரப்பப்படும்.

மாணவர்களின் பொது அறிவை வளர்க்க, அரசு தொழில் பயிற்சி நிலைய விடுதிகளில் ஸ்மார்ட் டி.வி. மற்றும் இணையதளத்துடன் கூடிய நூலகங்கள் அமைக்கப்படும். அனைத்து தனியார் தொழில் பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறுகிய கால பயிற்சி வழங்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் திறனை வளர்த்துக்கொள்ள, அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி எடுக்க வசதி செய்து தரப்படும்.

இவ்வாறு அவர் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

# முக்கனி திருவிழாவிற்கு வருகை தரும் விவசாயிகளுக்கு மியா சகி மா மரக்கன்று வழங்க முடிவு

சென்னை, ஜூன் 23

ஜப்பான் நாட்டின் அரிய வகை மா மரம் மியா சகி இந்தியாவில் பரவலாக பலமாநிலங்களில்காய்க்க துவங்கியுள்ளது.

இதில், அதிக அளவு ஆன்ட்டி ஆக்சிடென்ட், பீட்டா கரோட்டின் போலிக் ஆசிட் மற்றும் விட்டமின் ஏ, சி மற்றும் தாது உப்புகள் அதிகம் உள்ளது. இந்த மாம்பழம் 2.5 முதல் 3 லட்சம் வரை ஒரு கிலோ விலை போகின்றது.

இந்நிலையில், காவேரி கூக்குரல் முக்கனி திருவிழாவிற்கு வருகைதரபதிவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு மியா சகி மா மரக்கன்று வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் ஒருவருக்கு ஒரு மரக்கன்று மட்டும் வழங்க வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் உங்கள் அதிக தேவையை பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றோம் என்றும் காவேரி கூக்குரல் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டில் 3000 வரை விற்கக்கூடிய மியா சகி மா மரக்கன்றை நாம் நேரடியாக இறக்குமதி செய்து ஒரு மரக்கன்று 300 ரூபாய்க்கு வழங்க உள்ளோம்.

இந்த சலுகை நிகழ்வில் கலந்து கொள்வார்களுக்கு மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவேரி கூக்குரல் முக்கனி திருவிழாவில் பங்கேற்க

இன்றே பதிவு செய்யவும் என்றும், குறைந்த அளவு நாற்றுகள் மட்டுமே வழங்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

# கள்ளச்சாராய விற்பனை தடுப்பு நடவடிக்கை அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூன் 23

ஜப்பான் நாட்டின் அரிய வகை மா மரம் மியா சகி இந்தியாவில் பரவலாக பலமாநிலங்களில்காய்க்க துவங்கியுள்ளது.

இதில், அதிக அளவு ஆன்ட்டி ஆக்சிடென்ட், பீட்டா கரோட்டின் போலிக் ஆசிட் மற்றும் விட்டமின் ஏ, சி மற்றும் தாது உப்புகள் அதிகம் உள்ளது. இந்த மாம்பழம் 2.5 முதல் 3 லட்சம் வரை ஒரு கிலோ விலை போகின்றது.

இந்நிலையில், காவேரி கூக்குரல் முக்கனி திருவிழாவிற்கு வருகைதரபதிவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு மியா சகி மா மரக்கன்று வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் ஒருவருக்கு ஒரு மரக்கன்று மட்டும் வழங்க வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் உங்கள் அதிக தேவையை பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றோம் என்றும் காவேரி கூக்குரல் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டில் 3000 வரை விற்கக்கூடிய மியா சகி மா மரக்கன்றை நாம் நேரடியாக இறக்குமதி செய்து ஒரு மரக்கன்று 300 ரூபாய்க்கு வழங்க உள்ளோம்.

இந்த சலுகை நிகழ்வில் கலந்து கொள்வார்களுக்கு மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவேரி கூக்குரல் முக்கனி திருவிழாவில் பங்கேற்க

இன்றே பதிவு செய்யவும் என்றும், குறைந்த அளவு நாற்றுகள் மட்டுமே வழங்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

# ஆனிமாத பவுர்ணமியொட்டி திருவண்ணாமலையில் பக்தர்கள் கிரிவலம்



வேங்கிக்கால், ஜூன் 23

திருவண்ணாமலையில் ஆனி மாத பவுர்ணமியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் அண்ணாமலையை வலம் வந்து வழிபட்டனர்.

ஆனி மாத பவுர்ணமி இன்று வெள்ளிக்கிழமை காலை 7.46 மணிக்கு தொடங்கி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.21 மணிக்கு நிறைவு பெறுகிறது.

பவுர்ணமியை முன்னிட்டு இன்று காலை முதலே பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த ஏராளமான பக்தர்கள் குடும்பம், குடும்பமாக 14 கிலோ மீட்டர் தூரம் உள்ள அண்ணாமலையை வலம் வந்து வழிபட்டனர்.

கிரிவல பக்தர்களின் வசதிக்காக சிறப்பு ரெயில்கள் மற்றும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. வெயிலின் தாக்கத்தையும் பொருட்படுத்தாமல் இன்று காலை முதல் பக்தர்கள் கிரிவலம் வந்த வண்ணம் உள்ளனர்.

இன்று இரவு முதல் நாளை அதிகாலைக்குள் பல லட்சம் பக்தர்கள் கிரிவலம் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருவண்ணாமலை நகரில் உள்ள பெரும்பாலான தங்கும்விடுதிகளில்உள்ள அனைத்து அறைகளும் நிரம்பி விட்டன. அண்ணாமலையார் கோவிலில் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் தாகம் தணிக்க சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் நீர்மோர் வழங்கப்பட்டது.

இன்று காலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் கைக்குழந்தையுடன் வந்த பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய கலெக்டர் பாஸ்கர பாண்டியன் உத்தரவின் படி தனி வழி அமைக்கப்பட்டு தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

சாமி தரிசனம் செய்த அனைவருக்கும் லட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. கிரிவலப்பாதையில் பக்தர்களுக்கு இடையூறாக ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள்நிறுத்த கூடாது என போலீசார் எச்சரித்துள்ளனர்.

# ஆன்லைனில் சோடா ஆர்டர் செய்தவருக்கு பார்சலில் வந்த காலி டப்பா



சென்னை, ஜூன் 23

சமீப காலமாக உணவு பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை அனைத்தையும் ஆன்லைனில் ஆர்டர் செய்து வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் ஸ்விக்கியில் எலுமிச்சை சோடா ஆர்டர் செய்த ஒரு பயனர், காலியான டப்பாவின் புகைப்படத்துடன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு தற்போது வைரலாக பரவி வருகிறது.

அவரது பதிவில், ஸ்விக்கி இப்படி ஒரு காலியான கிளாசை எனக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதற்கு நன்றி.

நான் ஆர்டர் செய்த லைம் சோடா மற்றொரு ஆர்டரில் வந்து சேர்ந்து விடும் என்று நம்புகிறேன் என கிண்டலாக கூறியுள்ளார்.

இதற்கு ஸ்விக்கி அளித்த பதிலில், உங்களது ஆர்டர் ஐடியை பகிர்ந்தால் இதுகுறித்து என்ன செய்ய முடியும் என பார்ப்பதாக கூறியிருந்தது.

அவரது இந்த பதிவு ஆயிரக்கணக்கான பார்வைகளை பெற்றது. அதில் ஒரு பயனர், அடிக்கிற வெயிலில் பாட்டிலில் இருந்த சோடா ஆவியாகி இருக்கும் என கிண்டலாக கூறியுள்ளார்.

மற்றொரு பயனர், இது நீராவி வடிவத்தில் திரவத்தை அனுப்பி வைக்ககூடிய ஒரு தொழில்நுட்பம் என கூறியுள்ளார். இதே போன்று பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# பூண்டி ஏரியில் இருந்து புழலுக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தம்



திருவள்ளூர், ஜூன் 23

சென்னைநகர மக்களின் முக்கிய குடிநீர் ஏரிகளாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகைஏரிகள்உள்ளன.

இந்த 5 ஏரிகளிலும் சேர்த்து மொத்தம் 11 ஆயிரத்து 757 மில்லியன் கன அடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். தற்போது குடிநீர் ஏரிகளில் தண்ணீர் இருப்பு 5 ஆயிரத்து 74 மி.கனஅடியாக (5 டி.எம்.சி) குறைந்து உள்ளது.

பூண்டி ஏரியில் தண்ணீர் இருப்பு மொத்த கொள்ளளவான 3231 மி.கனஅடியில் வெறும் 82 மி.கனஅடியாக சரிந்து விட்டது. இதனால் பூண்டி ஏரி வேகமாக வறண்டு வருகிறது. ஏரியின் ஷட்டர் பகுதியில் மட்டும் குட்டை போல் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. ஏரியில் தண்ணீர் இருப்பு குறைந்து உள்ளதால் அங்குள்ள மீன்கள் இறந்து வருகின்றன. ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கி கிடக்கிறது.

பூண்டி ஏரியில் நீர் மட்டம் சரிந்ததை தொடர்ந்து அங்கிருந்து புழல் ஏரிக்கு தண்ணீர் அனுப்புவது நிறுத்தப்பட்டு உள்ளது. பூண்டி எரியில் நீர்இருப்பு அதிகரித்தால் தான் இனி வரும் நாட்களில் புழலுக்கு குடிநீர் அனுப்ப முடியும். ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலும் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் கிருஷ்ணா தண்ணீர் இப்போதைக்கு திறக்கப்படவாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

புழல் ஏரியில் மொத்த கொள்ளளவான 3300 மி.கன அடியில் 2908மி.கன அடி தண்ணீர் உள்ளது. கடந்த சில நாட்களாக சென்னை மற்றும் புறநகர் பகுதியில் மாலை மற்றும் இரவு நேரங்களில் இடி மின்னலுடன் கனமழை கொட்டி வருகிறது. இதனால் புழல் ஏரிக்கு தண்ணீர் வர தொடங்கி உள்ளது.

இன்று காலை நிலவரப்படி புழல் ஏரிக்கு 152 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. குடிநீர் தேவைக்காக 245 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரியில் மொத்த கொள்ளளவான 3645 மி.கனஅடியில் 1649 மி.கனஅடியும் தண்ணீர் உள்ளது. 60 கனஅடி தண்ணீர் வருகிறது. சோழவரம் ஏரியில் மொத்த கொள்ளளவான 1081 மி.கனஅடியில் வெறும் 124 மி.கனஅடியும், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியில் 500 மி.கனஅடியில் 311 மி.கன அடி நீர் இருக்கிறது. குடிநீர் ஏரிகளில் தற்போதைய நிலவரப்படி 5 டி.எம்.சி தண்ணீர் இருப்பு உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு இதே நாளில் 7 டி.எம்.சி தண்ணீர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

# சார்பதிவாளர் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை



திருவள்ளூர், ஜூன் 23

பள்ளிப்பட்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றிய சார்பதிவாளர் ஸ்ரீதர் கடந்த சில நாட்களாக விடுமுறையில் உள்ளார். இதைத்தொடர்ந்து பேரம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றிய மோகன்ராஜ் என்பவர் பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பொறுப்பு சார்பதிவாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று மோகன்ராஜ் தனது காரில் கணக்கில் வராத பணத்தை எடுத்து செல்வதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து திருவள்ளூர் லஞ்ச ஒழிப்புத் துறை துணை போலீஸ் சூப்பிரண்டு ராமமூர்த்தி தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் தமிழரசி, மாலா உள்ளிட்டோர் விரைந்து சென்றனர். இதற்குள் மோகன்ராஜ், தனது காருக்கு பெட்ரோல் நிரப்ப சென்றபோது குமாரராஜு பேட்டை கிராமத்தில் லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் அவரை சுற்றி வளைத்து சோதனை செய்தனர். அப்போது காரில் சோதனை செய்த போது கணக்கில் வராத ரூ.11 லட்சம் ரொக்கப்பணம் இருந்ததை கண்டு பிடித்தனர்.

இதைத்தொடர்ந்து மோகன்ராஜை பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். மேலும் அலுவலகத்திலும் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனை மற்றும் விசாரணை நேற்று இரவு 11 மணிவரை நடைபெற்றது.

இதற்கிடையே இன்று காலை 7 மணி முதல் திருவள்ளூர் அடுத்த கீழ்நல்லாத்தூர் கிராமத்தில் உள்ள சார்பதிவாளர் மோகன்ராஜின் வீட்டில் லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். லஞ்ச ஒழிப்புத்துறை துணை போலீஸ் சூப்பிரண்டு ராமமூர்த்தி தலைமையில் 10 அதிகாரிகள் இதில் ஈடுபட்டு வருகிறார்கள். வீட்டில் உள்ள ஆவணங்களை அவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அமராவதி அணையில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறப்பு

சென்னை, ஜூன் 23

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்டம் அமராவதி அணை பழைய பாசனத்துக்குட்பட்ட ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்காரை கண்ணாடிபுத்தூர், சோழமா தேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய 8 பழைய ராஜ வாய்க்காலங்கள் உள்ளன. இந்த பாசனப்பகுதிகளுக்கு, வருகிற 24ந்தேதி முதல் நவம்பர் மாதம் 6ந்தேதி வரை 135 நாட்களில், 80 நாட்கள் தண்ணீர் திறப்பு, 55 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில், முதல் போக பாசத்துக்காக அமராவதி அணையில் இருந்து 2 ஆயிரத்து 74 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கு: இதுவரை 8 பேர் கைது



கள்ளக்குறிச்சி, ஜூன் 23

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் விஷ சாராயம் குடித்ததில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 80க்கும் அதிகமானோர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து சாராயம் விற்பனை செய்தது தொடர்பாக அதேபகுதியை சோ்ந்த கோவிந்தராஜ் என்கிற கண்ணுக்குட்டி, அவரது மனைவி விஜயா, கோவிந்தராஜ் சகோதரா் தாமோதரன் ஆகிய 3 பேரை கைது செய்த போலீசாா், அவா்களிடம் தீவிர விசாரணை நடத்தினர்.

அதில் அவா்கள் சேஷசமுத்திரம் கிராமத்தை சோ்ந்த சின்னதுரை (வயது 45) என்பவா்டம் இருந்து சாராயம் வாங்கி விற்பனை செய்தது தொியவந்தது. இதையடுத்து சின்னதுரையை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கடலூா் தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

தொடா்ந்து இச்சம்பவத்தில் தொடா்புடைய சாகுல் ஹமீது என்பவரை போலீசார் கைது செய்தனர்.

இவர் மதுக்கரை போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள நிறுவனங்களில் இருந்து சட்டவிரோதமாக மெத்தனால் வாங்கி வந்து கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது. மாதேஷ் என்பவர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சங்கராபுரம் பகுதியை சேர்ந்த ஜோசப் ராஜாஎன்பவரைசிபிசிஐடி போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கில் ரங்கநாதபுரம் பகுதியைச் சேர்ந்த சகுந்தலா என்பவரை சிபிசிஐடி போலீசார் கைது செய்துள்ளனர்.

இவர் சட்டவிரோதமாக சாராயத்தை சப்ளை செய்து வந்தது விசாரணையில் அம்பலமானது. இதுவரை இவ்வழக்கில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்ரித் பாரத் திட்டம்: புதுப்பொலிவு பெறும் ஈரோடு ரெயில் நிலையம் கட்டுமான பணிகள் தீவிரம்



ஈரோடு, ஜூன் 23

மத்திய அரசின் அம்ரித் பாரத் ஸ்டேசன் திட்டத்தின் கீழ் 554 ரெயில் நிலையங்களை மறுவடிவமைப்பு செய்வதற்கான பணிகளை கடந்த பிப்ரவரி மாதம் 26ந் தேதி பிரதமர் நரேந்திரமோடி தொடங்கி வைத்தார். அதன்படி சேலம் ரெயில்வே கோட்டத்துக்குட்பட்ட திருப்பத்தூர், மொரப்பூர், பொம்மிடி, ஈரோடு, கோவை வடக்கு, மேட்டுப்பாளையம், நாமக்கல், சின்ன சேலம் ஆகிய 8 ரெயில் நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள் நடந்து வருகிறது.

ஈரோடு ரெயில் நிலையத்தில் ரூ.38 கோடியே 9 லட்சம் செலவில் மறுசீரமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ரெயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் காளை மாட்டு சிலை பகுதியில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படுகிறது. இதற்காக மேற்கூரை அமைப்பதற்காக கம்பிகள்அமைக்கப்பட்டு உள்ளன.

மேலும், இருசக்கர வாகனங்களை சிரமமின்றி நிறுத்தும் வகையில் 'இன்டர்லாக்' கற்கள் பதிக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ரெயில் நிலையத்தின் நுழைவு வாயில் பகுதியில் மேற்கூரைகள் அமைக்கப்படுகிறது. ரெயில் நிலையத்தில் வாகனங்கள் எளிதாக வந்து பயணிகளை இறக்கிவிட்டு செல்வதற்கு புதிய வழித்தடங்கள் அமைக்கும் பணிகளும் நடந்து வருகிறது.

ரெயில் நிலையத்தின் நுழைவு வாயில் பகுதியில் 2 மிகப்பெரிய அழகிய நுழைவு வளைவு அமைக்கப்பட உள்ளன. வாகன நிறுத்தம் விசாலமாக அமைக்கப்பட உள்ளது. ஒரே நேரத்தில் 100 நான்கு சக்கர வாகனங்கள், 800 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் பிரமாண்டமாக வாகன நிறுத்துமிடம் அமைகிறது. பயணிகள் பிளாட்பாரங்களுக்கு விரைவாக வந்து சேரும் வகையில் அகலமான புதிய நடைபாதை அமைக்கப்படுகிறது. 4 நகரும் படிக்கட்டுகள், 4 மின் தூக்கிகள் அமைக்கப்பட உள்ளன.

ரெயில் நிலைய பிளாட்பாரங்களில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்படுகிறது. நிலையத்துக்கு வரும் ரெயில்களின் விவரம், அவை நிறுத்தப்படும் பிளாட்பாரங்கள் குறித்த தகவல்களை முழுமையாக அனைத்து பயணிகளும் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்படுகிறது.

# ஓடி ஒளியவில்லை என்று முதல்வர் சொல்வது நகைப்புக்குரியது: எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜூன் 23

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் குறித்த விவாதம் நடத்தக்கோரி கழக சட்டமன்ற உறுப்பினர்கள் முழக்கமிட்டபோது அவையில் இல்லாமல் ஒளிந்துகொண்டிருந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், சபாநாயகர் எங்களை வலுக்கட்டாயமாக அராஜகப் போக்குடன் வெளியேற்றிய பிறகு வந்து, தான் "ஜனநாயக மாண்பு காப்பாளர்" என்று ஒரு நாடகமாடி, கள்ளச்சாராய மரணங்கள் குறித்த முற்றிலும் ஏற்கத்தகாத ஒரு விளக்கத்தை அளித்துள்ளார்.

அ.இ.அ.தி.மு.க.வினர் சபையில் இல்லாதபோது வந்து, தான் ஓடி ஒளியவில்லை என்று தி.மு.க. முதல்வர் சொல்வது நகைப்புக்குரியது. சென்ற ஆண்டு செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 23 பேர் கள்ளச்சாராயத்தால் உயிரிழந்த பிறகாவது, இந்த தி.மு.க. அரசு கள்ளச்சாராயத்தை ஒழிக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று கள்ளக்குறிச்சியில் இச்சோகம் நிகழ்ந்திருக்காது. எனவே, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்களுக்கு முழு பொறுப்பு ஸ்டாலின் தான்.

மூன்றாண்டுகள் கும்பகர்ண தூக்கத்தில் இருந்து விட்டு, இப்போது வந்து "நான் அதிகாரிகளை மாற்றிவிட்டேன்" என்று சொல்வது பொறுப்பற்றத் தன்மையின் உச்சம். மக்கள் நலன் ஒன்றே அ.தி.மு.க.வின் அரசியல் ஆதாயம். அந்த ஆதாயம் நிறைவேற நாங்கள் அனைத்து ஜனநாயக வழிகளிலும் போராடுவோம்.

18.02.2017 அன்று நீங்கள் சட்டப்பேரவையில் அரங்கேற்றிய அராஜகம், தமிழ்நாடு சட்டப்பேரவை கண்டிராத ஜனநாயகப் படுகொலை. ஜனநாயக மாண்பைப் பற்றி பேச தி.மு.க.விற்கு எந்த அருகதையும் இல்லை.

நீங்கள் அதிகாரிகளை மாற்றவே 50 உயிர்கள் பலியாக வேண்டுமா? இப்போது நீங்கள் வாசிக்கும் பட்டியலால் போன 50 உயிர்கள் மீண்டும் வந்துவிடுமா? மனசாட்சி என்பது கொஞ்சமும் இருந்தால் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## குடிப்பழக்கத்தால் தகராறு: உறவினர் வீட்டுக்கு சென்ற மனைவி.. புதுமாப்பிள்ளை எடுத்த விபரீத முடிவு

திருப்பூர், ஜூன் 23

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் கே.வி. பழனிசாமி நகரைச் சேர்ந்தவர் மோகன் குமார் (வயது 34). லாரி டிரைவர். இவருடைய தந்தை மனோகரன் ஏற்கனவே இறந்து விட்டார். மோகன் குமாருக்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு திருமணம் நடைபெற்றது. மோகன் குமார் தனது மனைவி மற்றும் தாயார் ஈஸ்வரியுன் ஒரே வீட்டில் வசித்து வந்தார்.



மோகன்குமாருக்கு குடிப்பழக்கம் இருந்து வந்துள்ளது. இதனால் கணவன் மனைவிக்கு இடையே தொடர்ந்து சண்டை ஏற்பட்டு வந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு குடிபோதையில் வந்த மோகன்குமாரை தாயாரும், மனைவியும் திட்டி விட்டு உறவினர் வீட்டுக்கு சென்று விட்டனர்.

இதனால் மனமுடைந்து காணப்பட்ட மோகன்குமார் தனது வீட்டின் விட்டத்தில் சேலையால் தூக்கில் தொங்கினார். இதை பார்த்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்த புகாரின் பேரில் வெள்ளகோவில் சிறப்புபோலீஸ்சப்இன்ஸ்பெக்டர் செல்வராஜ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். திருமணமான ஒரு மாதத்தில் லாரி டிரைவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பிளஸ்1 துணைத்தேர்வு ஹால்டிக்கெட் 25ம் தேதி வெளியீடு

சென்னை, ஜூன் 23

அரசு தேர்வுத்துறை இயக்குநர் சா.சேதுராம வர்மா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பிளஸ்1 வகுப்புக்கான துணைத்தேர்வு அடுத்த மாதம் (ஜூலை) நடைபெற உள்ளது. இந்தத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்களுக்கான ஹால்டிக்கெட் வருகிற 25ம் தேதி வெளியிடப்படுகிறது. தனித்தேர்வர்கள் தங்களுக்கான ஹால்டிக்கெட்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதுதவிர, செய்முறைத் தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தை தனித்தேர்வர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ள வேண்டும்.

ஹால்டிக்கெட் இல்லாதவர்கள் தேர்வெழுத அனுமதி வழங்கப்படாது. எனவே, உரிய வழிமுறைகளை பின்பற்றி தனித்தேர்வர்கள் ஹால்டிக்கெட்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். மேலும், துணைத் தேர்வுக்கான விரிவான கால அட்டவணையை மேற்கண்ட வலைதளத்தில் அறியலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: வேட்புமனு தாக்கல் நிறைவு

விழுப்புரம், ஜூன் 23

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. புகழேந்தி (வயது 70) உடல் நலக்குறைவால் கடந்த ஏப்ரல் மாதம் 6ந் தேதி மரணம் அடைந்தார். இதனால் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10ந் தேதி நடைபெற உள்ளது.



இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 14ந் தேதியன்று விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலகமான தாலுகா அலுவலகத்தில் தொடங்கியது. இந்த நிலையில் விக்கிரவாண்டி இடைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தற்போது நிறைவடைந்துள்ளது. இந்த இடைத்தேர்தலில் போட்டியிட மொத்தம் 64 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

தி.மு.க. சார்பில் அன்னியூர்சிவா, பா.ம.க. சார்பில் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் அபிநயா ஆகியோர் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். வாக்கு எண்ணிக்கை ஜூலை 13ந்தேதி நடைபெற உள்ளது.

## பிரேசிலில் துப்பாக்கி சூடு 7 பேர் பலி

ரியோ டி ஜெனிரோ, ஜூன் 23

பிரேசில் நாட்டில் சீரா மாகாணம் விகோசா டு சீரா நகரில் உள்ள கேளிக்கை விடுதி அருகே இன்று அதிகாலை சிலர் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு கார், பைக்குகளில் 10க்கும் மேற்பட்டோர் ஆயுதங்களுடன் கும்பலாக வந்தனர். மேலும், கேளிக்கை விடுதி அருகே நின்றவர்களை துப்பாக்கி முனையில் சிறை பிடித்தனர்.

பின்னர், அவர்கள் அனைவரையும் நகரின் மையப்பகுதியில் உள்ள



தூண் அருகே அழைத்து சென்று மண்டியிட வைத்தனர்.

பின்னர், அந்த கும்பல் வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு ஒவ்வொருவராக சுட்டனர். ஆண்கள், பெண்கள் என மொத்தம் 7 பேரை அந்த கும்பல் சுட்டுக்கொன்றது. பின்னர், துப்பாக்கி சூடு நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பிச்சென்றது.

இந்த துப்பாக்கி சூட்டில் 2 பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார்படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், இந்த துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டது யார்? துப்பாக்கி சூட்டிற்கான காரணம் என்ன? போதைப்பொருள் கடத்தல் கும்பல் மோதலா? இரு தரப்பு மோதலால் இந்ததுப்பாக்கி சூடு நடைபெற்றதா? உள்பட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உல்லாசத்திற்கு அழைத்த இளம்பெண்... வீட்டிற்கு சென்ற வாலிபருக்கு காத்திருந்த அதிர்ச்சி

சென்னை, ஜூன் 23

அரியானா மாநிலத்தை சேர்ந்தவர் விஜய் தாபா (வயது 20). இவர், கடந்த சில மாதங்களாக பூந்தமல்லி அடுத்த செம்பரம்பாக்கம் பகுதியில் தங்கி, அங்குள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்து வருகிறார். இவருக்கு, செல்போன் செயலி மூலம் சென்னை வடபழனியில் உள்ள இளம்பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து வாலிபரை அப்பெண் உல்லாசத்திற்கு அழைத்துள்ளார். அதன்படி வாலிபர் வடபழனி கங்கை அம்மன் காலனியில் உள்ள ஒரு வீட்டுக்கு சென்று இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருந்தார். இதற்காக பேசிய பணத்தை விட கூடுதலாக தரும்படி இளம்பெண் கேட்டதால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அந்த வீட்டின் மற்றொரு அறையில் பதுங்கி இருந்த திருநங்கை, இளம்பெண் உள்பட 4 பேர் சேர்ந்து பீர் பாட்டிலை உடைத்து குத்தி கொலை செய்து விடுவதாக விஜய் தாபாவை மிரட்டி, அவரிடம் இருந்த ரூ.12 ஆயிரத்தை பறித்து விட்டு மிரட்டி அனுப்பினர்.

அதன்பிறகு விஜய் தாபாவை செல்போனில் தொடர்பு கொண்ட அவர்கள்,

இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருந்த வீடியோவை காட்டி, அதனை சமூகவலைதளங்களில் வெளியிட்டு விடுவதாகவும் மிரட்டி பணம் கேட்டு அடிக்கடி மிரட்டி வந்தனர்.


இது குறித்து விஜய்தாபா போலீசில் புகார் அளித்தார். புகாரின்பேரில் வடபழனி போலீசார் வழக்குப்பதிவு செய்து இந்த சம்பவத்தில் தொடர்புடைய அப்ரின் பர்கானா(21), அஸ்விதா என்ற முஸ்தபா (26) என்ற திருநங்கை மற்றும் தினேஷ்குமார் (25), பரத்குமார் (24) ஆகிய 4 பேரை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.1.67 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்

சென்னை, ஜூன் 23

சென்னைவிமானநிலையத்திற்கு வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த நிலையில், மலேசியாவில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு வந்திறங்கிய பயணிகளிடம்அதிகாரிகள்சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் 2 பேர் தங்கள் உள்ளாடை மற்றும் உடைமைகளுக்குள் தங்க செயின்கள் மற்றும் வளையல்களை மறைத்து வைத்து கடத்தி வந்திருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அவர்களிடம் இருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதே போல் அபுதாபியில் இருந்து விமானத்தில் வந்த மற்றொரு பயணியிடம் 23 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.




இந்த இரண்டு சம்பவங்களிலும் மொத்தம் ரூ.1.67 கோடி மதிப்பிலான 2.66 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து கடத்தலில் ஈடுபட்ட நபர்களை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 18 ஆயிரம் உதவி லோகோ பைலட்கள் தேர்வு: ரெயில்வே வாரியம் முடிவு

சென்னை, ஜூன் 23

மேற்கு வங்காளம் டார்ஜிலிங் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பயணிகள் விரைவு ரெயில் மீது சரக்கு ரெயில் மோதிய விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேற்கு வங்கத்தின்நியூஜல்பைகுரி ரெயில் நிலையத்திலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் தண்டவாளத்தில் நின்றிருந்த கஞ்சன்ஜங்கா விரைவு ரெயில் மீது பின்னால் வந்த சரக்கு ரெயில் மோதியது.

இந்த ரெயில் விபத்தை தொடர்ந்து ரெயில்வே வாரியம் புதிதாக 13 ஆயிரம்உதவிலோகோபைலட்கள் (ரெயில் என்ஜின் டிரைவர்) பணியமர்த்த உள்ளது. இதுதொடர்பாக 16 மண்டல ரெயில்வே பொது மேலாளர்களுக்கும் ரெயில்வே வாரியம் ஒரு புதிய வழிகாட்டுதல்களை அனுப்பி உள்ளது. ஏற்கனவே, கடந்த ஜனவரி மாதம் ரெயில்வே வாரியம், அனைத்து மண்டலங்களிலும் மொத்தமாக 5 ஆயிரத்து 696 உதவி லோகோ பைலட்டுகளை பணிக்கு அமர்த்த ஒப்புதல் தெரிவித்திருந்தது. இந்த நிலையில், அந்த எண்ணிக்கை 3.3 மடங்கு உயர்த்தி மொத்தமாக 18 ஆயிரத்து 799 உதவி லோகோ பைலட்டுகளை பணிக்கு அமர்த்த அனுமதி வழங்கியுள்ளது. இதில் தெற்கு ரெயில்வேயின் கீழ் கடந்த ஜனவரி மாதம் 218 உதவி லோகோ பைலட்களை பணிக்கு அமர்த்த ஒப்புதல் தெரிவித்திருந்தது. தற்போது 726 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிட த்தக்கது. ரெயில் விபத்து மற்றும் லோகோ பைலட்களில் தொடர் புகார்களின் எதிரொலியாக உதவி லோகோபைலட்கள்பணியிடங்களை அதிகரிக்க ரெயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.


புதிதாக உதவி லோகோ பைலட்டுகளை வேலைக்கு அமர்த்துவதற்கான நடைமுறைகளை உடனடியாக தொடங்கும்படி ரெயில்வே வாரியம் அனைத்துமண்டலபொது மேலாளர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளது. ஆனால், தற்போதைய சூழலில் புதிதாக ஆட்களை தேர்வு செய்து, பல்வேறு நடைமுறைகளை முடித்து பணியில் அமர 6 மாதங்கள் ஆகும் என ரெயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## விஜய் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் சிறுவன் கையில் பற்றிய தீ

சென்னை, ஜூன் 23

நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தனது 50வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு திரைத்துறையினர் உட்பட பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். கள்ளக்குறிச்சி சம்பவத்தால் தனது பிறந்தநாளைக் கொண்டாட வேண்டாம் என விஜய் தெரிவித்திருந்தார். ஆனாலும் சில இடங்களில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அதில் ஒரு அதிர்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது

சிறுவன் ஒருவன், நெருப்பில் எரியும் ஓடுகளை உடைக்கும் சாகசத்தில் ஈடுபட்டார். அதற்காக சிறுவன் கையில்



நெருப்பை பற்ற வைக்க, ஓடுகளை உடைத்த பின்னரும் சிறுவன் கையில் பற்றிய தீ அணையவில்லை. அதிலிருந்து அந்த சிறுவனை காப்பாற்ற முயன்றவரின் கையிலும் தீ பற்றியது.

பின்னர், அங்கிருந்தவர்கள் உடனடியாக தீயை அணைத்தனர். இந்த வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. இந்த வீடியோயை பார்த்த சிலர் தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்து வருகின்றனர்.

## ஆபத்தான நிலையில் இருப்போருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

புதுச்சேரி, ஜூன் 23

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் அருந்திய விவகாரத்தில் பாதிக்கப்பட்டு புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரி, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரி, சேலம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில், "மது அருந்தி நீண்ட நேரம் ஆனவர்கள் அவர்களது உடலுறுப்பு ஒவ்வொன்றாக செயலிழந்து வருகிறது என்று தெரிவதற்கு முன்னால் கூட ஆஸ்பத்திரிக்கு வர தயக்கம் காட்டியதால் இறப்புகள் அதிகம் சந்திக்க நேர்ந்தது. புதுச்சேரியை பொறுத்த வரை 8 பேர் ஓரளவு நலமுடனும், 8 பேர் ஆபத்தான நிலையிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் இன்று (அதாவது நேற்று) காலை நோயாளியுடன் உடனிருந்தவருக்கு பாதிப்பு தென்பட்டு அவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரும் கூட 2 நாட்களுக்குமுன்பு மது அருந்தியிருக்கிறார். அவர் வெளியில் சொல்லாமல் அதற்குரிய பாதிப்பு தென்பட்டவுடன் தற்போது அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். 9 பேர் அவசர சிகிச்சை வார்டிலும், 8 பேர் பொது வார்டிலும் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதில் 4 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சேலத்தில் 31 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

## நீலகிரியில் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே சிறுத்தை நடமாட்டம் : சி.சி.டி.வி.யில் பதிவான காட்சி

நீலகிரி, ஜூன் 23

நீலகிரி மாவட்டம் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் சமீப காலமாக சிறுத்தை நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இந்த நிலையில் ஊட்டி அருகே உள்ள தூனேரி என்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே அதிகாலை நேரத்தில் சிறுத்தை ஒன்று உலா வந்துள்ளது. இந்த காட்சி அங்குள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியுள்ளது. இது குறித்து அப்பகுதி மக்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்த நிலையில், வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்தை ஆய்வு செய்து வருகின்றனர். மேலும்



இரவு நேரங்களில் பொது மக்கள் தனியாக வெளியே வர வேண்டாம் எனவும், சிறுத்தை நடமாட்டம் தென்பட்டால் உடனடியாக வனத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் வனத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## சிறுவனை கடித்து குதறிய 'ராட்வீலர்' நாய்.. சென்னையில் மீண்டும் சம்பவம்

பூந்தமல்லி, ஜூன் 23

சென்னை மாங்காடு அடுத்த பொழுமணிவாக்கம் சார்லஸ் நகர் பகுதியை சேர்ந்தவர் ராகேஷ். இவரது மனைவி எலிசபெத். இவர்களுக்கு துஜேஷ் (வயது 11) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். நேற்று வீட்டின் வெளியே துஜேஷ், தனது நண்பர்களுடன் விளையாடி கொண்டிருந்தான். அப்போது துஜேஷ் வீட்டின் எதிரே வசிக்கும் கார்த்திக் என்பவர் தனது வீட்டில் வளர்க்கும் 'ராட்வீலர்'



நாயை நடைபயிற்சிக்கு அழைத்து சென்றார்.

அப்போது அந்த நாய் திடீரென, அங்கு விளையாடி கொண்டிருந்த துஜேசை கடித்து குதறியது.

இதில் துஜேசின் தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவனை சிகிச்சைக்காக பூந்தமல்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இது குறித்து சிறுவனின் பெற்றோர் நாயின் உரிமையாளரான கார்த்திக் மீது மாங்காடு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இது தொடர்பாக போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## போரூர், பெருங்குடி ஏரிகள் ரூ.20 கோடியில் மேம்படுத்தப்படும் அமைச்சர் சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, ஜூன் 23

சட்டசபையில் இன்று சி.எம். டி.ஏ. மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பிறகு துறை சார்ந்த அறிவிப்புகளை அமைச்சர் பி கே சேகர் பாபு வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது,

சென்னைப் பெருநகர் பகுதியில் 10 பொது நூலகங்கள், அதிவேக இணையம், போட்டித்தேர்வுகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு தேவையான வசதிகள் ஆகியவை ரூ.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும். மேலும் ரூ.30 கோடி செலவில் மூன்று பன்நோக்கு மையம் அமைக்கப்படும். 'சென்னை அங்காடி'ரூ.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். சென்னை நகரில் வெள்ள அபாயத்தை குறைக்க வெள்ளக்கட்டுப்பாடு வரைபடம் தயாரிக்கப்படும். மெரினா கலங்கரை விளக்கம் முதல் தீவுத்திடல் வரை மெரினா பாரம்பரிய வழித்தடம் ரூ,10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். அண்ணாசாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் உள்ளூர் பகுதி திட்டம் செயல்படுத்தப்படும். கோயம்பேடு மார்க்கெட் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னை பெருநகரத்தில் அமைந்துள்ள 10 சுரங்கப்பாதைகள் ரூ,8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். .திருவான்மியூர் பஸ் நிலையம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். போரூர் ஏரி ரூ.10 கோடியிலும், பெருங்குடி ஏரி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆர்.ஜே. பாலாஜி நடிக்கும் புதிய திரைப்படம்... தயாரிப்பு நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பு



தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகராக பயணத்தை தொடங்கிய ஆர்.ஜே.பாலாஜி தற்போது வெற்றிகரமான கதாநாயகனாக வலம் வருகிறார். சமீபத்தில் ஆர்.ஜே. பாலாஜி இயக்குனர் கோகுல் இயக்கத்தில் வெளியான 'சிங்கப்பூர் சலூன்' திரைப்படத்தில் நடித்திருந்தார். இதைத் தொடர்ந்து அவர் 'மூக்குத்தி அம்மன்' திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தை நடிகை திரிஷாவை வைத்து இயக்கப்போவதாக தகவல் வெளியானது.

நடிகர்ஆர்.ஜே.பாலாஜி இன்றுதனது 39வதுபிறந்தநாளை கொண்டாடுகிறார். இந்த நிலையில் அவரது பிறந்தநாளை முன்னிட்டு ஆர்.ஜே.பாலாஜி நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இந்த படத்தை 'குட் நைட்' மற்றும் 'லவ்வர்' போன்ற வெற்றிப் படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளதாக போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

இந்த போஸ்டரில் ரத்தக் கறை படிந்த ஒரு கத்தியால் கேக்கை வெட்டி, ஒரு கையில் கேக் துண்டையும் மறு கையில் மெழுகுவர்த்தியை சிகரெட் போல் பிடித்துக் கொண்டும், சட்டை முழுக்க ரத்த கறைகளுடனும் ஆர். ஜே.பாலாஜி இருக்கிறார். இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த படத்தின் இயக்குனர், பிற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மலையாளத்தில் பெரியளவில் கவர்ச்சியாக நடிக்க முடியாது, ஆனால்... மாளவிகா மேனன்



மலையாளத்தில் முன்னணி நடிகையாக ஜொலிக்கும் மாளவிகா மேனன், தமிழில் 'இவன் வேற மாதிரி', 'விழா', 'பிரம்மன்', 'வெத்துவேட்டு', 'நிஜமா நிழலா', 'பேய் மாமா', 'அருவாசண்ட' போன்ற பல படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில், நடிகை மாளவிகா மேனன் சினிமா வாழ்க்கை பற்றிப்பகிர்ந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது,

'நான் முதன்முதலில் நடித்தது 'நித்ரா' என்ற மலையாள படத்தில்தான். அப்போது எனக்கு 14 வயது.சின்னபெண்ணாகஇருப்பதால் என்னை இயக்குனர் ஹீரோயினுக்கு தங்கையாக நடிக்க வைத்துவிட்டார்.

பின்னர், '916' என்ற படத்தில் கதாநாயகியாக அறிமுகம் ஆனேன். அதில் நிறைய சவாலான காட்சிகளில் நடிக்க வேண்டியது இருந்தது. சிரமம்தான் இருந்ததே தவிர, பெரியளவில் கேலி பேச்சுகள் வரவில்லை. மலையாள படங்களில் பெரியளவில் கவர்ச்சியாக நடிக்க முடியாது. அப்படிப்பட்ட கதாபாத்திரங்களும் வராது. ஆனால், தமிழ், தெலுங்கில் அப்படி நடிக்கலாம்.

இதுவரை முத்தக்காட்சிகளில் நடித்தது கிடையாது. ஆனால் அப்படி நடிக்க கேட்டிருக்கிறார்கள். கதைக்கு மிகவும் அவசியப்பட்டால், அது பேசப்படும் காட்சியாக இருந்தால் நிச்சயம் நடிப்பேன். அதில் ஒன்றும் தவறு இல்லை. அப்படி ஒரு படம் வரட்டும் பார்க்கலாம். இவ்வாறு கூறினார்.

# நடிகையின் டீப் பேக் புகைப்படங்களை வெளியிட்ட மர்ம நபர்கள் ரசிகர்கள் அதிர்ச்சி



நடிகைகள் ராஷ்மிகா மந்தனா, கத்ரினா கைப் ஆகியோரின் முகத்தை பயன்படுத்தி 'டீப் பேக்' வீடியோகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இந்தநிலையில், கன்னட சின்னத்திரை நடிகை வைஷ்ணவி கவுடா தொடர்பான ஒரு 'டீப் பேக்' புகைப்படம் வெளியாகி உள்ளது.

அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்ட அவரது புகைப்படங்களை மர்ம நபர்கள் ஆபாசமாக சித்தரித்து வெளியிட்டுள்ளனர். அவற்றைப் பார்த்த நடிகை வைஷ்ணவி கவுடா மற்றும் அவரது ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தார். மேலும் இதுபற்றி பெங்களூரு சைபர் கிரைம் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இது கன்னட சின்னத்திரை நடிகைகள் இடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முகத்தில் ரத்தக்காயத்துடன் இருக்கும் பிரியங்கா சோப்ரா



தமிழில் கடந்த 2002ம் ஆண்டு விஜய் நடிப்பில் வெளியான 'தமிழன்' திரைப்படம் மூலம் நடிகையாக அறிமுகமானார் பிரியங்காசோப்ரா.அதனைத்தொடர்ந்துஅவருக்குபடவாய்ப்புகள் அதிகமாக வரத்தொடங்கின. பின்னர் பாலிவுட் நடிகையாக உயர்ந்தார். இவர் 2018ம் பாடகர் நிக் ஜோனாசை திருமணம் செய்துகொண்டார். இந்தத் தம்பதிக்கு ஒரு மகள் உள்ளார்.

இந்நிலையில்நடிகைபிரியங்காசோப்ராதனதுஇன்ஸ்டாகிராம் பக்கத்தில் முகத்தில் ரத்தக்காயத்துடன் இருக்கும் வீடியோவை பகிர்ந்திருக்கிறார். அந்த வீடியோ வைரலானநிலையில், அதனை பார்த்த அவரது ரசிகர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

பின்னர், இது அவர் நடிக்கும் 'தி பிளப்' படத்தின் படப்பிடிப்பு வீடியோ என்று தெரியவந்தது. ஆனாலும், ரசிகர்கள் 'உங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்', 'என்னாச்சு' என கமெண்ட் செய்து வருகிறார்கள்.

# 'நான் நடிகையாவதற்கு என் குடும்பமே...' லட்சுமி மஞ்சு



பிரபல தெலுங்கு நடிகையான லட்சுமி மஞ்சு, தமிழில் மணிரத்னம் இயக்கிய 'கடல்', ராதா மோகன் இயக்கிய 'காற்றின் மொழி' படங்களில் நடித்து இருக்கிறார்.

இவர் தெலுங்கு நடிகர் மோகன்பாபுவின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தான் நடிகையாவதற்கு தனது குடும்பம் தடையாக இருந்ததாக கூறியுள்ளார். இது குறித்து அவர் பேசுகையில்,

'நான் நடிகையாவதற்கு என் குடும்பம் ஒரு தடையாக அமைந்தது. என் அப்பாவிற்கு நான் நடிகையாவதில் துளியும் விருப்பம் கிடையாது. தென்னிந்திய நடிகர்கள் தங்கள் தங்கையோ, மகளோ நடிகையாக விரும்புவதில்லை.

இது தெற்கே மட்டுமல்ல நாடு முழுவதும் உள்ளது.' என்றார்.

நடிகை லட்சுமி மஞ்சு இப்படி பேசி இருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது, ஏனெனில் சில நடிகைகளே தங்கள்குடும்பத்தால்இதுபோன்றஎதிர்ப்பைஎதிர்கொண்டதைபற்றிவெளிப்படையாகப்பேசியிருக்கிறார்கள்.

# கோபா அமெரிக்கா கால்பந்து தொடர்: கனடாவை வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கிய அர்ஜெண்டினா



உலகக்கோப்பை, யூரோகோப்பை கால்பந்து தொடருக்கு அடுத்து புகழ்பெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் இன்று தொடங்கியது. இந்த தொடர் கடந்த 1916ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த தொடர் வரும் ஜூலை 15ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில் தென் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த அர்ஜெண்டினா, பிரேசில், பொலிவியா, சிலி, கொலம்பியா, ஈக்வேடார், பராகுவே, பெரு, உருகுவே, வெனிசுலா ஆகிய 10 அணிகளும்வட அமெரிக்க கண்டத்தைச்சேர்ந்த அமெரிக்கா, மெக்சிகோ, ஜமைக்கா, பனாமா, கனடா, கோஸ்டா ரிகா ஆகிய 6 அணிகளும் என மொத்தம் 16 அணிகள் கலந்துகொள்கின்றன. இவை 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த தொடரில் இன்று நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் அர்ஜெண்டினா கனடா அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 20 என்ற கோல் கணக்கில் அர்ஜெண்டினா அணி கனடாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கியது.

# டி20 உலகக்கோப்பை; டி காக் அதிரடி அரைசதம்... தென் ஆப்பிரிக்கா 163 ரன்கள் குவிப்பு



9வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடந்து வருகிறது. லீக் சுற்று முடிவில் 8 அணிகள் 'சூப்பர் 8 ' சுற்றுக்கு முன்னேறின. இந்நிலையில் இந்த தொடரில் செயிண்ட் லூசியாவில் இன்று நடைபெற்று வரும் சூப்பர் 8 சுற்று ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து தென் ஆப்பிரிக்கா அணிகள் ஆடி வருகின்றன.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து தென் ஆப்பிரிக்காவின் தொடக்க ஆட்டக்காரர்களாக டி காக் மற்றும் ஹென்றிக்ஸ் ஆகியோர் களம் இறங்கினர். இதில் டி காக் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 86 ரன் சேர்த்த நிலையில் ஹென்றிக்ஸ் 19 ரன்னில் அவுட் ஆனார்.

மறுபுறம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய டி காக் அரைசதம் அடித்த நிலையில் 65 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து கிளாசென் மற்றும் மில்லர் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். இதில் கிளாசென் 8 ரன்னிலும், அடுத்து வந்த மார்க்ரம் 1 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து மில்லர் உடன் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஜோடி சேர்ந்தார்.

இதில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மில்லர் 28 பந்தில் 43 ரன் எடுத்த நிலையில் அவுட் ஆனார். இறுதியில் தென் ஆப்பிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 163 ரன்கள் குவித்தது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிரடியாக ஆடிய டி காக் 65 ரன்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 164 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி ஆட உள்ளது.

# சூப்பர் 8 சுற்று அமெரிக்காவுக்கு எதிராக டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சு தேர்வு



9வது டி20உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் தற்போது சூப்பர்8 சுற்று ஆட்டங்கள் வெஸ்ட் இண்டீசில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் அமரிக்கா அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணியின் கேப்டன் பவல் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி, அமேரிக்கா அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

# பெர்லின் ஓபன் டென்னிஸ்: ரைபகினா காயம்... அரையிறுதிக்கு முன்னேறிய அசரென்கா



பெர்லின் ஓபன் டென்னிஸ் தொடர் ஜெர்மன் தலைநகர் பெர்லினில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, கஜகஸ்தானின்எலினாரைபகினாஉடன்மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டில் 31 என்ற புள்ளிக்கணக்கில் விக்டோரியா அசரென்கா முன்னிலையில் இருந்தார். அப்போது எலினா ரைபகினாவுக்கு திடீரென உடல்நலக்குறைபாடு ஏற்பட்டதால்அவர்போட்டியில்இருந்துவிலகினார். இதன் காரணமான அசரென்கா அரையிறுதிக்கு முன்னேறினார்.

# தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி முழு விவரம்

2024,25 ஆம் ஆண்டில் சொந்த மண்ணில் இந்திய அணி விளையாடும் சர்வதேச போட்டிக்கான அட்டவணையை பி.சி.சி.ஐ நேற்று வெளியிட்டது. இந்நிலையில் இந்திய அணி நவம்பரில் தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ளதாக தென் ஆப்பிரிக்கா மற்றும் இந்திய கிரிக்கெட் வாரியங்கள் அறிவித்துள்ளன.

அதன்படி இந்திய அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி அங்கு 4 டி20 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடுகிறது. இந்த தொடர் நவம்பர் 8 முதல் 16ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த தொடரின் முதல் ஆட்டம் நவம்பர் 8ம் தேதி டர்பனிலும், 2ம் ஆட்டம் நவம்பர் 10ம் தேதி க்கெபெர்ஹாவிலும், 3ம் ஆட்டம் நவம்பர் 13ம் தேதி செஞ்சுரியனிலும், 4ம் ஆட்டம் நவம்பர் 16ம் தேதி ஜோகன்பர்க்கிலும் நடைபெறுகிறது. அனைத்து ஆட்டங்களும் இந்திய நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு தொடங்குகிறது.



**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்**
**திறன்தெரிந்து கூறப் படும்**

**விளக்கம்:**

**மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.